# வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார்? - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், வாழ்க்கை  ஆச்சரியம் நிறைந்திருப்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். ஒருநாள் நீங்க ரொம்ப சந்தோஷமா இருப்பதாக தோன்றும், மறுநாள் மருத்துவர் உங்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராத பெலவீனம் இருப்பதாக சொல்லலாம். விபத்துகள், இயற்க்கை சீற்றங்கள், குற்றங்கள், இயலாமை போன்றவை எந்த நொடியிலும் வாழ்க்கையை திருப்பி போடா வாய்ப்புண்டு. அப்படி நடக்கும் போது, ஜனங்க கேட்ப்பாங்க, "வாழ்க்கையில் இந்த மாதிரியான வேதனைகளில் தேவன் எங்கதான் இருக்காரு? அப்படி பட்ட மக்கள் அவர்களை காட்டிலும் அதிக வலியும் வேதனையும் அனுபவிக்கும் மக்களிடமிருந்து பதில்களை பெற வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட இரண்டு பேரை பார்க்க இருக்கிறோம்.

ஜோனி எரிக்சன் டாடா தனது பதினேழு வயதில் நீச்சலடிக்க குதித்த போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டார்கள், அதினால் குவாட்ரிப்லீகியா ஏற்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் தான் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, அவர்களுக்கு

மார்பக புற்றுநோயும் இருக்கிறது, ஒவ்வொரு நாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார்கள். Dr. மைகேல் எஸ்லே இவர் மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தார், ஆனால் தாங்க முடியாத கடுமையான வேதனை உண்டான போது ராஜினாமா செய்துவிட்டார். அவர் வேதனை மிகுந்த பல அறுவை சிகிச்சைகளை செய்து இருக்கிறார், மருத்துவர்கள் அவருடைய தண்டுவடத்தின் அனைத்து தட்டுகளையும் அகற்றி அவருடைய ஜீவனை காப்பாற்ற எல்லா எலும்புகளையும் ஒன்று சேர்த்து தண்டுவடத்தை நிற்க வைத்திருக்கிறார்கள். இப்போது அவர் பிறேன்ட்வுட் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையை நடத்தி வரும் போதகராக இருக்கிறார், டேநேன்சீ, ஆனாலும் ஒவ்வொருநாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார். வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார் என்பதற்கு இவர்கள் இருவரும் பதிலளிக்க இருக்கிறார்கள். இந்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷித்த தொகுப்பை காண அன்போடு அழைக்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான்தான் ஜான் அன்கேர்பெர்க், எங்களோடு இணைந்து கொள்வதற்காக நன்றி. இன்றைக்கு இரண்டு சிறப்பு விருந்தினர்கள் இருக்கிறார்கள், Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி டாடா எரிக்சன். இன்றைய நிகழ்ச்சியில், நமது விருந்தினர்களை சில

கேள்விகள் கேட்க இருக்கிறோம்: தீராத வேதனையோடு வாழ தேவையான பெலத்தை தேவனிடத்தில் இருந்து பெற்றுகொள்வது எப்படி? நேயர்களில் சிலர் கூட, தீராத வேதனை வலியோடு இருக்கலாம். தீராத வேதனை என்று சொல்லும்போது அது என்றும் தீராத ஒன்றாக இருக்கும். நாளைக்கும் அந்த வலி இருக்கும், அடுத்த நாளும் இருக்கும் அடுத்த நாளும் இருக்கும். சொல்ல போனா அது போக போக ரொம்ப அதிகமாகிக்கொண்டே இருக்கும். அந்த வேதனையோடு வாழ்வது எப்படி? தேவன் உங்களுக்கு எப்படி உதவிடுவார்? இந்த தீராத வேதனை உங்களுக்கு மன அழுத்தத்தை கொடுத்திடும். அழுத்தத்தின் உச்சத்தை பெறுவோம். அடுத்த ஏமாற்றம் உண்டாகும் ஏன்னா இந்த வேதனையால நாம வழக்கமாக செய்யும் சில விஷயங்களை நம்மால் சரிவர செய்ய முடியாத நிலை ஏற்படும், இல்லையா? மைகேல், உங்களிடமிருந்து தொடங்கலாம் இந்த நிகழ்ச்சியில் முதல் கேள்வி “ஏன்” என்பதுதான். ஏன் இந்த வேதனைகளை தேவன் அனுமதிக்கிறார், சொல்லுங்க?

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:** பல காரணங்கள் இருக்கலாம், அதை மூன்றாக பிரித்து சொல்லட்டுமா. முதலாவதாக, அது நம் பாவத்தினால் உண்டானதாக இருக்கலாம், தனிப்பட்ட நபரின் பாவம், அது நமக்கு உபத்திரவத்தை கொண்டு வரும். எப்பவும் அப்படியிருக்காது, ஒருத்தருக்கு ஒருத்தர் என்றல்ல, நாம விழுந்துபோன சுபாவத்தோடு இருப்பதனால நாம பாவம் செய்றோம்,

தவறுகிறோம், எல்லைகோட்டை மீறி நடந்திடுவோம். சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கை முறையை பார்க்கும்போது ஒவ்வொருத்தருக்கும் தனிப்பட்ட நிலையிலான பாடுகள் வந்திட வாய்ப்புண்டு. நம்முடைய கவனத்தை ஈர்க்கும்படியாக தேவன் நம்முடைய அனுபவங்களில் வேதனைகளை இணைத்திடலாம். C.S. லீவிஸ், பொதுவாக சொல்லியிருக்கிறார், முரட்டானுடைய இருதயத்தின் கோட்டையில் வேதனை என்னும் கொடி அர்ப்பணிக்கும் நிலையை குறிக்கிறது. நான் பாவம் செய்தால், என் கவனத்தை திருப்ப இதுவும் ஒரு வழியாக இருக்கிறது.

இரண்டாவதாக, நாம பொதுவாக வீழ்ந்துபோன சுபாவத்தோடு தான் இருக்கிறோம். ஆதாமும் ஸ்திரீயும் தோட்டத்தில் கீழ்படியாமல் மீறி நடந்த காலத்தில் இருந்து, எல்லாம் வீழ்ச்சியடைந்தது, சீர்குலைந்து போனது. அதனால, நிறைய பேர் கண்ணாடி போடவேண்டியிருக்கு, பலருக்கு முடகுவாதங்கள் இருக்கு, பலருக்கு வயதாகும்போது பலவித வேதனைகள் உண்டாகிறது. நாம வேணுன்னே பாவம் செய்கிறோம் என்று சொல்வதற்கு இல்லை, ஒவ்வொருத்தருடைய பாவங்கள் என்றல்ல, அடிப்படையில் விழுந்து போன சுபாவத்தோடு தான் இருக்கிறோம்.

மூன்றாவது, அசவுகரியமான ஒன்று, சிலவேளைகளில் புரிந்துகொள்ள முடியாத காரணங்களினால் அவரே இதை அனுமதிக்கிறார். ஆனா மேலான நோக்கத்திற்காக அனுமதிக்கிறார்

என்று நம்புகிறேன், கணிக்கமுடியாத காரணங்கள் நமக்கு தெரியாத காரணங்கள் இருக்கென்று நம்புகிறேன். தீராத வியாதி மற்றும் இயலாமையில் வேதனைபடுகிறவர்களான, நமக்கு ஒரு தெரிந்தெடுப்பு இருக்கிறது, இந்த கொடுமையான சூழ்நிலையை எப்படி கடந்து வர போகிறேன், தேவன் நல்லவர் அன்பானவர் என்று தெரியும், ஆனா என்னோட வாழ்க்கை சிறப்பாகவும் அன்பானதாகவும் இப்ப இல்லையே?

**ஆன்கர்பெர்க்:** ஆமா. எனக்கு நினைவிற்கு வருகிற வசனம் என்னன்னா, “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டு இருக்கிறது, நீங்கள் என்னிடத்தில் கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு என்று பவுல் கூறியிருக்கிறார்,” (பிலிப்பியர் 1:29-30) அல்லது அப்போஸ்தலர் 14:22, “நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.” அல்லது 2 கொரிந்தியர் 1:5, “எப்படியெனில் கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறது போல கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.”இந்த மூன்றையும் பற்றி சொல்ல விரும்புகிறீர்களா?

**எஸ்லே:** சரி, பவுலின் கண்ணோட்டத்தில் இந்த வரிகளை பார்க்கும்போது, அதாவது, தமஸ்குவுக்கு போகிற வழியை திரும்பி

பார்க்கணும், அவருடைய அழைப்பை பற்றி நாம தெரிஞ்சுக்கணும் அனனியா என்ன செய்தார்.

**ஆன்கர்பெர்க்:** அருமையான சம்பவம், சிறந்த உதாரணமாக இருக்கு.

**எஸ்லே:** ரொம்ப கொடுமையான சம்பவம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அதுவும் தெரியும்.

**எஸ்லே:** ரொம்ப கொடுமையான ஒரு நிலை. ஆனா...

**ஆன்கர்பெர்க்:** இந்த அனனியா யாருன்னு, முதல்ல சொல்லுங்க?

**எஸ்லே:** சரி, சவுல், இந்த கட்டத்தில், கிறிஸ்தவத்தை பின்பற்றும் கிறிஸ்தவர்களை அழிக்கும்படிக்கு உத்தவரவு பெற்றுக்கொண்ட கடிதத்தோடு பயணித்து கொண்டிருக்கிறார். இங்க அவர் தமஸ்குவுக்கு போகிற வழியில், தேவன் அவரை குருடாக்கினார். அனனியா என்ற தீர்க்க தரிசி தன்னோட சொந்த வேலையை பார்த்துகொண்டு இருந்தார். அவர் அங்கிருந்த ஒரு சின்ன தீர்க்க தரிசி,அ வருடைய வீடு அங்கதான் இருந்தது. தேவன் அவனிடத்தில் பேசி அவனை பார்த்து, "இப்போது குருடாக இருக்கும் சவுல் என்ற மனிதனிடம் நீ போய் பேச வேண்டும் என்று சொன்னார்." உங்களுக்காக அந்த பகுதியை வாசிக்கிறேன்.

அதற்கு அனனியா: ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலமில் உள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச்

செய்தானென்று அவனைக்குறித்து அநேகரால் கேள்விப்பட்டு இருக்கிறேன். இங்கயும் உம்முடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியரால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான். அதற்கு கர்த்தர் நீ போ புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாக இருக்கிறான். இங்க தான் முக்கியமான ஒன்று சொல்லப்படுகிறது. “அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டும் என்பதை நான் அவனுக்கு காண்பிப்பேன் என்றார்.” இங்க இந்த நபர் உண்மையில், இவரையும் ஒரு கனம்பெற்ற ரபி என்று சொல்லலாம் என நினைக்கிறேன். இவன் ஜனங்களை சிறைபிடுத்து எருசலேமிற்கு கொண்டு போகும் அதிகாரத்தை உடையவனாக இருந்தான், இவை குருடாக்கினார், இங்க அனநியாவிற்கு அவனிடம் போய் அவனை கண்டிந்துகொள்ளும் வேலை கொடுக்கப்படுகிறது. இங்க இந்த சம்பவம் வெளியானது: அதாவது, கண்களின் செதில்கள் விழுந்தது. ஆனா இங்க அருமையான அருட்பணி வாக்குறுதி அருளபடுகிறது, “என்னுடைய நாமத்தினிமித்தம் அநேக பாடுபட வேண்டும்.” யூதனுக்கு யூதனாக என்கிற அவனுடைய வைராக்கியம், இப்ப ரொம்ப வே சூடு பிடித்தது இப்ப நூற்றி என்பது டிகிரீ மாறி புறஜாதிகளின் அப்போஸ்தலனாக மாறினார். அவர், உண்மையில், பலவருடம் சிறையில் இருந்தார், கப்பற்சேதத்தில் சிக்கினார், அடிஉதை, விஷபூச்சி கடி, உபத்திரவப்பட்டார்,ஓடிட்டே இருந்தார், கோபத்தோடு இருந்தவர்கள்

மத்தியில் இருந்து தப்பித்துகொள்ளும் கூடைகளில் வைத்து இறக்கப்பட்டார் பல நிந்தனைகளை சகித்து ஓடினார். அவருடைய வாழ்நாள் முழுவதும் மரணம் வரைக்கும் ஓடறதும் சிறையுமாகதான் இருந்தது. இந்த பரிசுத்தவானாகிய பவுல் தான் பாடுப்படும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர். சரி, இப்ப நீங்க செழிப்பை பற்றி 101 வசனமும் உபத்திரவத்தை பற்றி 101 வசனமும் யடுக்க சொன்னா, நிச்சயமா செழிப்பை பற்றி 101றை எடுப்பேன். ஆனா வேதாகமத்தில் அது மட்டும்தான் தேவனுடைய சித்தம் என்று சொல்லப்பட்டதாக தெரியவில்லை. நாம உபத்திரவத்தை அனுபவிப்போம், ஏதாவது ஒரு வழியில் ஏதாவது ஒரு விதத்தில் இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. நீங்க சொன்ன அதே பகுதியில் இருபத்தி ஆறாம் வசனத்தில், ஒரு வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார், ஒரே வசனத்தில் எட்டு முறை ஆபத்து சூழ்ந்திருப்பதை விளக்கியிருக்கிறார், இல்லையா? அவருடைய வாழ்நாள் முழுவதும் இந்த மாதிரியாக தான் வாழ்ந்துகொண்டு இருந்தார். அவர் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம்; அவர் தேவனால் சிறப்பாக பயன்படுத்தப்பட போகிறார்; ஆனா சிறையில் இருந்த நாட்களில் மற்ற எல்லா இக்கட்டான நிலைகளில் கூட, கல்லெறியுண்ட போது, அவரை சிறைபிடித்தபோது, சென்ற இடங்களில் அவதூறாக நடத்தப்பட்ட போது பொறுத்திருந்தார்,

இதுதான் வாழ்க்கை. அவர்தான் தலைசிறந்த அப்போஸ்தலனாகிய பவுல். இப்ப நாம எங்க இருக்கோம்?

**எஸ்லே:** பவுலுடைய வாழ்க்கையை பார்க்கும்போது, அவரை போல இல்லாவிட்டாலும் கூட, நாம் கிறிஸ்துவால் அழைக்கப்பட்டு இருந்தால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். அதனால, நம்முடைய வாழ்விலும் கூட, பவுல் தெரிந்துகொள்ளப்பட்டது போல, எனக்கு ஒரு சந்தேகம் இருக்கு தேவன் தம்முடைய மகிமைக்காக நலனுக்காக எப்படி தன்னை பயன்படுத்துவார் என்பது பவுலுக்கு தெரிந்திருக்குமா. சரி இருக்கட்டும் ஜோனி தன்னோட வாழ்க்கையை பார்க்கும்போதும் நான் என்னோட தீராத வேதனையை பார்க்கும்போதும், உங்களோட நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருப்பவர்களில் சிலருக்கு எங்களை விட சொல்ல முடியாத அதிகப்படியான வேதனையில் இருக்கலாம், அவர்களும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரங்களாக இருக்கிறார்கள் என்பதை பார்க்கணும். உங்களை அவர் நேசிக்கிறார், உங்கள் மீது கரிசனையோடும் உங்களை பயன்படுத்தவும் விரும்புகிறார். இது ஏற்றுகொள்வது கடினம்தான், நம்முடைய திறனை நாம் இழக்கும் போது, நாம செய்துட்டு இருந்த வேலைகளை செய்ய முடியாது, “இல்ல, இதுக்குமேல நா எதுக்கும் லாயக்கு இல்ல.” இந்த கட்டத்தில் தான், எப்படியாவது, புரிந்துகொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்படுகிறோம், ஜான், நம்முடைய பெலவீனங்களில் அவர் நம்மை

பெலப்படுத்துகிறார். மாம்சத்தின் அளவுகோல்களை அவர் மேற்கொள்ள செய்து அதை நம்மில் ஒரு நிலையாக பயன்படுத்துகிறார். இந்த வாழ்நாட்களில் அதை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பது எனக்கும் தெரியாம தான் இருந்தது. அதை பற்றி நாம அப்பறம் பேசலாம்.

**ஆன்கர்பெர்க்:** சரி. இப்ப, உங்களுடைய வாழ்க்கையில் உண்ட தனிப்பட்ட அனுபவத்தை பற்றி சொல்லுங்க, சரியா? ஏன்னா இந்த சம்பவங்கள் நடக்கிறதற்கு முன்னால, எல்லாவற்றையும் சிறப்பாக செய்ய முடிந்தது. நீங்க சிறந்த ராகேட்பந்து ஆட்டக்காரர், எந்த காரையும் சரி செய்திடுவீங்க, வீட்டுல எல்லாத்தையும் சரிபடுத்துவீங்க, புல் தரைய சுத்தம் செய்வீங்க. அது அப்பறம் எப்படி இருந்தது என்று எனக்கு சொல்லுங்க.

**எஸ்லே:** மறுபடியும் எனக்கு அதை ஞாபகபடுத்தி என்னை கொஞ்சம் சோர்வடைய செய்வதற்காக உங்களை பாராட்டுகிறேன்.

அதாவது, உண்மைதான். நீங்க யார் என்கிற நிலையை இழந்திடுவீங்க, ஏன்னா உங்களுடைய அடையாளமே உங்களுக்கு போதுமானதாக இருக்கும். உங்களுடைய அடையாளம் என்பது, “என்னால இதை செய்ய முடியும், கைகளால் வேலை செய்பவன். எல்லாத்தையும் சரி செய்திடுவேன்.” அந்த காரியங்கள் எல்லாம் எடுபட்டு போனபோது, நாம முன்னாடி சொன்னது போல, உங்களை மறுபடியும் ஒழுங்கு படுத்தனும். என்னுடைய அடையாளம் என்பது இந்த உலகத்தில் நான்

எப்படி இருக்கேன் என்ன செய்கிறேன் என்பதை சார்ந்தில்லை, என்னுடைய அடையாளம் என்பது கிறிஸ்துவையும் அவருடைய கிரியையையும் சார்ந்திருக்கிறது. நம் ஒவ்வொருவரும் பயன்படுத்தப்பட முடியும் கிறிஸ்துவையும் அவருடைய கிரியைகளையும் சொல்லவேண்டும், நம்முடைய பெலவீனங்களில் எப்படி அவர் கிரியை செய்கிறார், நம்முடைய இயலாமையில் எப்படி செயல்படுகிறார், நம்மிடம் இல்லாத ஒரு சூழ்நிலைகளில் எப்படி நடத்துகிறார். அவர் நிறைய ஞானிகளை தெரிந்துகொள்ளவில்லை, புத்திமான்களையோ அல்லது, பெலமுள்ளவர்கலையோ தெரிந்துகொள்ளாமல், பெலவீனரை தெரிந்துகொண்டார், ஞானிகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில் பைத்தியமானவர்களை தெரிந்துகொண்டார், பெலமுள்ளவர்களுக்கு பதில் பெலவீனர். அப்ப என்னை பொறுத்தவரை கிறிஸ்துவில் நம்முடைய இடம், இது எல்லாவற்றையும் மாற்றி அமைப்பதாக இருக்கு: என்னுடைய அனுபவங்கள் தேவன் யாரென்று எனக்கு சொல்வதை அனுமதிக்காமல், தேவ வார்த்தை தேவன் யாரென்று போதிப்பதற்கு இடமளிக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** சரி,ஜோனி, ஜனங்க சோர்வடைந்து மன அழுத்தத்தோடு இருக்கும்போது என்ன பதில் என்பதை பற்றி நாம பேசனும் யன்னா அவங்க எப்போதும் தீராத வலி வேதனையோடு இருக்காங்க. உங்களுக்கு பிடித்த வசனங்களில் ஒன்று பிலிப்பியர் 1:3

இல்லையா, "நான் உங்களை பற்றி நினைவுகூரும் பொழுதெல்லாம் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்,"

ஜோனி எரிக்சன் டாடா: அந்த வார்த்தை என்னை ரொம்பவும் ஈர்த்தது. ஏன்னா அந்த பகுதியை கவனித்து பார்த்தேன். பவுல் பிலிப்பி பட்டணத்தின் நண்பர்களுக்கு சிறை கம்பிகளுக்கு உள்ளிருந்து எழுதுகிறார். இந்த கடித்ததை எப்படி வேணுன்னாலும் துவங்கியிருக்கலாம், டியர் பிரெண்ட்ஸ், சிறை நாறுகிறது. இங்க ரொம்ப குளிராக இருக்கிறது. உணவு நல்லா இருக்கு. காவலாளி நல்லா பழகீட்டாறு. உடன் இருப்பவர்கள் நல்லா இருக்காங்க. என்னுடைய சங்கலிகள் கைகளையும் கால்களையும் நெரிக்கிறது. ராத்திரிகளில் குளிர் அதிகமிருக்கு, எனக்கு போர்வை தர மறுத்துட்டாங்க..." இப்படி அவர் எழுதல. குறைசொல்வதிலிருந்து தன்னுடைய கடிதத்தை அவர் ஒருபோதும் தொடங்கினது கிடையாது, நா அந்த மாதிரிதா செய்திடுவேன். அதனாலதான் இந்த அருமையான சிறிய வசனத்தினால நான் ரொம்பவும் ஈர்க்கப்பட்டேன் பிலிப்பியர் 1:3. பவுல் இப்படிதான் தனது கடிதத்தை துவங்குகிறார், :உங்களை நினைக்கும்பொழுது நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்." ஓ, மை குடினஸ், என்னவொரு வார்த்தை; ஏன்னா இது எனக்கு சொல்ற விஷயம் என்னன்னா என்னோட வேதனையின் மத்தியில் என்னைவிட வேதனையோடு இருப்பவர்களை பார்க்க நான் முன்வரவேண்டும் என்று சொல்கிறது.

என்னுடைய மேஜைக்கு அருகிலுள்ள சுவற்றில் இருக்கும் ஒரு படத்தை உங்களுக்கு காட்ட விரும்புகிறன். ஜோனி அண்ட் பிரண்ட்ஸ் அலுவலகத்திற்குள் ஒவ்வொரு காலையிலும் நான் நுழையும்போதும், இந்த படத்தை பார்ப்பது வழக்கம். இது கானால நாங்க பார்த்த ஒரு ஆப்ரிக்க மனிதர். அவர் மரத்துல இருந்து கீழ விழுந்துட்டாரு, புதுகு பகுதி உடைஞ்சிடுச்சு, அவரை சாலை ஓரத்துல படுக்க வச்சிருந்தாங்க அங்க எந்த மருத்துவமனையும் இல்ல, கிளினிக் இல்ல, எந்த ஆம்புலன்சும் உதவும்படி அங்க வரல. அவருடைய நண்பர்கள் அவரை கண்டுபிடித்து வீட்டுக்கு கூட்டீட்டு வரும்வரைக்கும் எத்தனையோ மணிநேரம் அங்க படுத்து கிடந்தார். இப்ப அவர் தாங்கமுடியாத வேதனையோடு இந்த மாதிரிதான் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார். என்னோட அறைக்குள் நான் போகும்போது, இந்த புகைப்படத்தை பார்ப்பேன், எனக்கு இது பலவிஷயங்களை சொல்கிறது, ஆமா, பிலிப்பியர் 2:14, “எல்லாவற்றையும் முறுமுறுப்பு இல்லாமல் செய்யுங்கள்.” என்ன? நா அப்படி செய்யணுன்னு வேதம் என்னிடத்தில் எதிர்பார்க்கிறதா? “எல்லாவற்றையும் முறுமுறுப்பு இல்லாமல் செய்யணும்.” மைகேல் இப்பதா ஒரு விஷயத்தை சொனனர் நாங்க தேவனை அவருடைய வார்த்தையில் இருந்து தான் அறிந்துகொள்கிறோம். அப்ப நா முறுமுறுக்காம இருக்க போறேன், சுவற்றில் தொங்கிகொண்டிருக்கும் நபரின் படத்தை பார்த்து எனக்கு நானே சொல்லிகொள்வேன், “ஜோனி, உன்னோட முதுகுல எப்படிப்பட்ட வலி இருந்தாலும் சரி அல்லது உன்னோட இந்த இயலாமையின்

அளவு எவ்வளவாக இருந்தாலும் சரி, நீ உன்னோட முழு பெலத்தையும் இன்றைக்கு இந்த பிரச்சனையோடு இருப்பவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு பயன்படுத்த போரே, உன்னோட முழு பெலத்தோட முயன்று இவர்களை உற்சாகப்படுத்திடு, அவரை ஊக்குவித்திடு, தட்டி கோடு, ஊழியம் செய், இவரை போன்றவர்களுக்கு ஊழியம் செய்திடு என்பேன்."

இவரை போல ஒரு பில்லியன் மக்கள் உலகத்தில் இயலாமையோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள், வளர்ந்து வரும் நாடுகளில் என்பது சதவிகிதத்தினர். இங்க அமெரிக்கால நல்ல சக்கர நாற்காலியில் உட்கார்ந்து, மேஜையின் மீது நல்ல உணவுகளை வைத்து, உதவிக்கு நண்பர்களோடு வாழ்ந்து வருகிறேன். இந்த ஆசீர்வாதங்களை நானே வைத்துகொள்ள நினைக்கலாமா? அதாவது, நா ஆபிரகாம் மாதிரி இருக்கணும், மற்றவர்களுக்கு தேசங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கணும். இதை பரவ செய்திடவேண்டும். சூடான கிழங்கை போல என்னோட மடியில் இருந்து ஆசீர்வாதங்களை எடுத்து என்னை விட இக்கட்டான சூழ்நிலையில் இருப்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக இதை நான் பகிர்ந்துகொடுக்க வேண்டும்.

அதோட, ஜான், என்னோட மன அழுத்தத்தை எதுவும் மாற்றவே முடியாது. காலையில் எழும்பும் போது அந்த அழுத்தத்தின் அளவு அதிகமாகிட்டே தான் இருக்கும், குளிக்கும்போது, உடை உடுத்தும்போது, ஆனா நான் வீட்டை விட்டு வெளிய வந்து

என்னைவிட அதிக வேதனையில் இருப்பவர்களை பார்க்கும்போது அது மறைய துவங்கும். . என்னை விட மிக அதிகமான வேதனையில் பாடுகளில் இருக்கிறவர்களுக்கு என்னோட ஆலோசனை இதுதான். இன்றைக்கு என்னோட நண்பர்களுக்கு இதைதான் சொல்லி வருகிறேன். இதுதான் அழுத்தத்திற்கு சிறந்த தீர்வாகும்.

**ஆன்கர்பெர்க்:** நாம் Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடாவோடு பேசிக்கொண்டு இருக்கிறோம், எல்லாரையும் பாதிக்க கூடிய முக்கியமான தலைப்பை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம். தீராத வேதனையை அனுபவிக்கும்போது நீங்கள் என்ன செய்வீர்கள், உங்க வாழ்நாள் முழுவதும் இந்த வேதனையோடு இருக்கவேண்டி இருக்கும் நிலை எப்படி இருக்கும், சரியா? அது ஒருவேளை அதிகமாக வாய்ப்பிருக்கு; அப்படிப்பட்டவை உங்களை மன அழுத்தத்திற்குள் சோர்விற்குள் தள்ளிட வாய்ப்பிருக்கிறது, இல்லையா? அந்த சமயங்களில் தேவன் உங்களுக்கு எப்படி உதவிடுவார்? இங்க ஜோனியின் சக்கர நாற்காலியில் ஒரு வசனம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன், சரியா? தேவன் பவுலை ஆறுதல் படுத்தினதான வார்த்தை, அந்த ஆறுதல் பவுல் மற்றவர்களை ஆறுதல்படுத்த எப்படி உதவினது என்றி இருக்கிறது. அது என்ன வசனன்னா, “நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும் இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே

எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்." (2 கொரிந்தியர் 1:3-4) ஜோனி, இப்ப நீங்க சொல்லுங்க.

டாடா: சரி, இதை தான் இடைவேளைக்கு முன்பு நான் சொன்ன காரியம் நாம உபத்திரவத்தோடு இருக்கிற மற்றவர்களுக்கு ஆறுதல் செய்யும்படிக்கு தேவன் நமது உபத்திரங்களில் நமக்கு ஆறுதல் செய்கிறார். அதாவது, அது குவாட்ரிபலேகா இருந்தாலும், பாராபிலேகா இருந்தாலும், என்னால ஆறுதல் செய்ய முடியும், யாரையும் ஆறுதல் படுத்த தேவனால நா பயன்படுத்தப்படலாம். என்ன சந்தோசம் தெரியுமா, அது ஒரு கனம் , சிலாக்கியம் தெரியுமா. ஆனா தேவனுடைய வார்த்தைதான் ஆறுதல். அதாவது, ஒருநாள் நான் மன அழுத்தத்தில் சோர்ந்து இருந்தேன். நா ஒரு எலும்பு நிபுணரை பார்க்கும்படி போயிருந்தேன் அவர்கிட்ட ஏதாவது சக்திவாய்ந்த மருந்து கிடைக்குன்னு எதிர்பார்த்தேன், உடனடியான தீர்வு, ஆனா அந்த சிகிச்சையும் பலனில்லாம போச்சு. ஆனா அவர் தலைய ஆட்டிட்டே என்னோட கணவர்கிட்டையும் எங்கிட்டயும் சொன்னார், "உங்களோட சில எலும்புகள் ரொம்ப மோசமா இருக்குது, எங்களால உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது." இது சமீபத்தில் நடந்தது,. அடுத்த நாள் நா எழுந்து என்னோட அலுவலகத்துக்கு போகணும். உண்மையா ஜோனி மற்றும் நண்பர்கள் நிறுவனத்தின் தலைமையகத்திற்கு சென்று

நுழைந்ததும் எல்லாரையும் பார்த்து புன்னகைப்பது எனக்கு ரொம்ப வெறுப்பாக இருந்தது. சோர்வாக இருந்தேன்; என்னால முடியல; இருதயமே நொறுங்கிவிட்டது. 101 சாலையில் போயிட்டு இருக்கும்போது, அலுவலகத்துக்கு போயிட்டு இருந்தேன், அந்த சாலையில் போகும்போது வண்டி குலுங்கும்போது என்னோட பின்பகுதியின் வேதனை ரொம்ப அதிகமாயிட்டே இருந்தது. மனஅழுத்தம் மட்டுமில்ல இப்ப, இதுவரைக்கு இல்லாத தாங்கமுடியாத வலியும் இருக்கு. இப்ப, ஆண்டவரே, எனக்கு எப்படி ஆறுதல் கொடுக்க போறீங்க?

அப்ப திடீருன்னு பல வருடங்களுக்கு முன்னால நான் மனப்பாடம் செய்திருந்த வசனம் நினைவிற்கு வந்தது, சங்கீதம் 119:50, அதில சொல்லப்பட்டு இருக்கு, "அதுவே என் சிறுமையில் எனக்கு ஆறுதல், உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது." சில மொழிபெயர்ப்புகள் ஜீவனை புதுப்பித்தது, ஜீவனை பாதுகாத்தது என்கிறது. சரி, ஓ மை குட்னஸ், ஜான், அந்த சாலையின் மீதமுள்ள தூரம் முழுவதும், அடுத்த ஆறு நுழைவுகள் வரை, சத்தமா அறிக்கை செய்துட்டு வந்தேன் - சத்தமா - எனக்கு நினைவிற்கு வந்த எல்லா வசனத்தையும் அறிக்கை செய்தேன், " ஓ தேவனே, இந்த வேதனையில் உம்முடைய கிருபை எனக்கு போதும் என்று சொல்லியிருக்கிறீர், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறீர், நீர் யோசுவாவின் புத்தகத்தில் எனக்காக யுத்தம்

செய்வதாக சொல்லியிருக்கிறீர். ஆபத்தில் நீரே எனக்கு அனுகூலமான பெலன் என்று வாக்கு பண்ணியிருக்கிறீர். இவை அனைத்தும் நன்மைகேதுவானதாக மாறும் என்று நீர் வாக்குரைத்திருக்கிரீர்." பேங், பேங், பேங், பேங். அந்த சாலையின் ஒவ்வொரு நுழைவிலும் சுமார் இருபது வாக்குத்தத்தங்களை சொல்லியிருப்பேன்னு நினைக்கிறேன்.

இப்ப, ஜான், உண்மைய சொல்லன்னுன்னா, என்னோட அலுவலகத்தின் பார்கிங் பகுதிக்கு வர்றதுக்கு உள்ள தேவ வார்த்தை என்னை உயிர்ப்பித்தது, என்னை புதுப்பித்தது, என் ஜீவனை புதிதாக்கியது, ஏன்னா என்னோட வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் இருபது நிமிடங்கள் தான் இருக்கும், ஆனா தேவனுடைய வார்த்தை அவருடைய வாக்குத்தத்தங்கள் தான் நமக்கு ஆறுதல் என்று நம்மிடம் சொல்லும்போது, அதுதான் வாழ்வை உயிர்ப்பிக்கும் என்று சொல்லும்போது, அதை பற்றிகொள்ளவேண்டியது அவசியம். அதை பற்றிகொள்வதோடு விட்டுவிடாமல், அறிக்கை செய்யணும், சொல்லணும், சத்தமாக அறிக்கை செய்யணும், ஒலி கொடுக்கணும், அதுக்கு மாம்சத்தையும் இரத்தத்தையும் எலும்பையும் கொடுக்கணும். உண்மையா அர்த்தத்தோடு அறிக்கை செய்யணும், தேவன் தமது கிருபையை உட்புகுத்திடுவார். அவர் நாம இந்த விசுவாச அடியை எடுத்து வைக்கும்படியாக காத்துகொண்டு இருக்கிறார், மன அழுத்தத்தில் இருந்து விலகனும், நம்மை விட வேதனையோடு இருக்கிறவர்களை பார்க்க நாம முற்படவேண்டும், இதுவரைக்கு

அவருடைய வார்த்தையில் நாம நம்பாம இருந்த விஷயங்களை நம்ப ஆரம்பிக்கணும் விசுவாச அடியை எடுத்து வைக்க வேண்டும். தேவனை அறிந்துகொண்டவர்களாக, அவரை எல்லாவிதத்திலும் நம்பவேண்டும், வசனத்தின் இந்த நங்கூரத்தை பற்றிக்கொள்ள வேண்டும், மன அழுத்தம் என்கிறதான பனிமூட்டத்தை விளக்க விசிறியை ஆன் செய்வது போல செய்திடணும். ஒரு விஷயத்திற்காக நன்றியுள்ளவளாக இருக்கேன் மன அழுத்தம் வந்தாலும், சிலவேளைகளில் அது எல்லை மீறி இருந்தாலும், தேவனுடைய வார்த்தைகள் எனக்கு இருக்கிறது, மைகேல் கொஞ்சம் நேரத்திற்கு முன்பு வாசித்த வாக்குத்தத்தங்கள் என்னோட வாழ்க்கையை உயிர்ப்பிக்கும் படியாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், இப்ப தலைப்பை மாற்றிக்கொள்ள நினைக்கிறேன், சரியா? உபத்திரம் என்று நாம சொல்லும்போது, சபையில் இருக்கிற ஜனங்களில் பெரும்பாலானோர் ஆரோக்கியத்தை ஐசுவரியத்தை, செழிப்பை விசுவாசித்து அது வேணுன்னு நினைக்கிறாங்க. சில காரியங்களை தேவன் நமக்கு கொடுத்து ஆசீர்வதிக்கிறார், ஆனா ஜனங்கள் எடுத்துகொள்ள விரும்பாத வசனங்களை ஒதுக்கிடராங்கலே. அதை பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.

**எஸ்லே:** பிலிப்பியர் 1:29, “ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளபப்ட்டு இருக்கிறது, நீங்கள்

என்னிடத்தில் கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு.” ஏற்கனவே, ஜோனி பிலிப்பியர் புத்தகத்தை சந்தோஷம் நிரந்த புத்தமாக சொல்லியிருக்காங்க, அவர் சொல்றார், கவனிங்க, உங்களுக்கும் பாடுகள் இருக்கும். இவை ஆசீர்வாதங்கள், ஆமா, இவை அருமையானவை, நான் பாடுபடுகிறது போல நீங்களும் பாடுபட வேண்டியிருக்கலாம் என்கிறார்.

அப்போஸ்தலர் 14:22, “நாம் அநேக உபத்திரவங்கள் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்.” அது கடினம்தா இருக்கும், சில இடையூறுகள் வந்திடும். நாம தீமையான சூழலில் இருக்கிறோம், விழுந்து போன உலகத்தில் விழுந்து போன மக்களாக இருக்கிறோம்.

2 கொரிந்தியர் 1:5, “கிறிஸ்துவினுடைய பாடுகள் என்னிடத்தில் பெருகுகிறது போல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது.”

மேலும் இறுதியாக 1 பேதுரு 4:12, “பிரியமானவர்களே உங்களை சோதிக்கும்படிக்கு உங்கள நடுவில் பற்றியெரிகிற அக்கினியை குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல் இருங்கள்.” இதுல கடினமானது இதுதான், “கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூருந்து மகிழும்படிக்கு அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.” 1 பேதுருவின் முழு

பகுதியும் கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடுகிற மக்களுக்காக எழுதப்பட்டு இருக்கிறது. எனக்கு ஒன்னுமட்டும் புரியல எப்படி ஜனங்க 1 பேதுருவின் புத்தகத்தை ஆரோக்கியம் ஐசுவரியம் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பாங்க, இதுல சொல்லப்பட்டு இருப்பது என்னன்னா எல்லாரும் பாடவேண்டி இருப்பதால் நீங்கள் பாடுபடும்போது இதைதான் செய்ய வேண்டும் என்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி. இன்னும் சில நிமிடங்கள் தான் இருக்கும், இன்னொரு காரியத்தையும் சொல்லி முடிக்க விரும்புகிறேன், அதாவது மரண பயம். நாம மூன்று பேருமே கடந்த சில வருடங்களாக மரிக்கும் தருவாயை கடந்து வந்திருக்கிறோம். நா பொதுவா அப்படி சொல்ல கூடாது, ஆனா ஜோனி, அவங்க இதை கேள்வி பட்டதும், அவங்களுக்கு ஒருவேளை சந்தோஷமாக இருந்திருக்கலாம் ஏன்னா அவ்வளவு வேதனைகளை பாடுகளை சகிக்கிரார்கள். உங்களுக்கு எனக்கும் அதுல எந்த அதிகாரமும் இல்லை. எதார்த்தத்தை நாம ஏற்று கொள்ளனும், தேவன் நம்மை இரட்சித்திருக்கிறார், இல்லையா? இப்போது அந்த மாதிரி சூழ்நிலையில் இருப்பவர்கள், தாங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலையின் மத்தியில் தேவனுடைய ஆறுதலையும் சமாதானத்தையும் பெறுவது எப்படி?

**எஸ்லே:** சரி, முதலாவது உங்களுக்கு கிறிஸ்துவுடன் ஒரு ஐக்கியம் இல்லாமல் இருந்தால், அதுதான் நமக்கு இருக்கவேண்டிய முதல் காரியம் என்பதை புரிஞ்சுக்கணும், கிறிஸ்து வாழ்ந்தார் மரித்தார்

அடக்கம் பண்ணப்பட்டார் மறுபடியும் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை அறிந்து தெரிந்துகொள்ளணும். கிறிஸ்துவின் மீது கிறிஸ்துவின் மீது மாத்திரம் நம்பிக்கை வைப்பவர்களுக்குதான் நித்திய ஜீவன் இலவச ஈவாக வாக்குபண்ணப்பட்டு இருக்கிறது, நம்முடைய பாவங்கள் அப்போது மன்னிக்கப்படுகிறது. இதுதான் முக்கியமான கட்டமா இருக்குது, இந்த காரியத்தை தான் நான் இயேசு கிறிஸ்துவின் மீதும் அவருடைய கிரியைகளின் மீதும் விசுவாசம் வைப்பது என்று சொல்லுகிறோம்.

இந்த மாதிரியான சூழ்நிலைகளை நான் எதிர்கொள்ளும்போது, அது அறுவை சிகிச்சையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த மருத்துவமாக இருந்தாலும், தேவன் சொன்னதை கவனிக்கிறேன், அவருக்கு நம்முடைய நாட்கள் தெரியும், நம் தலையிலுள்ள முடியெல்லாம் எண்ணப்பட்டு இருக்கிறது. நாம எவ்வளவு காலம் வாழ்வோன்னு அவருக்கு தெரியும். அதனால, இதுல ஒரு சந்தோஷமான உணர்வு இருக்குது, சரி, இந்த அறுவை சிகிச்சை என்னை நித்தியா வீட்டிற்கு அழைத்து சென்றாலும் சரி, தேவனுடைய வார்த்தை எனக்கு முன்பாக இருக்கிறது. நா கண்விழித்தாலும் சரி, இந்த பூமியில் இருக்கிற காலம் வரைக்கும் தேவனுடைய வார்த்தை எனக்காக சொல்லப்பட்டு இருக்கிறது என்றிடுவேன்.

ஜோனி சொன்னதை ஒப்பிடும்போது, இது பல கிறிஸ்தவர்களுக்கு கடினமாக இருக்கலாம். அதாவது, ஜோனி தீர்க்கமுடியாத

பிரச்சனைகளோடு இருக்காங்க, நானும் சொல்ல முடியாத வேதனைகளோடு இருக்கிறேன். எங்களை விட அதிகமான குறைவான வலியோடு இருப்பவர்களையும் எங்களுக்கு தெரியும். அவங்க எனக்கு உதவுற மாதிரி நான் செய்றேன், குறை சொல்றதுக்கு எதுவுமே இல்லை. ஆனா ஜோனி எங்கிட்ட ஒரு விஷயத்தை சொல்லும்போது, அது என்னை வெளியில கொண்டு வருது. எனக்கும் நண்பர்கள் இருக்காங்க, என்னோட பத்து சதவிகித நேரத்தை முதுகு வலியோடு இருக்கிறவங்களோட தான் நா செலவிடுகிறேன், இப்பதா முதல் முறையா தங்களுக்கு இந்த பிரச்சனை இருப்பதை உணர்ந்திருக்கிறார்கள். ஒருவேளை இந்த மாதிரியான வியாதியோடு இருப்பவர்க்லாய் நீங்க பார்க்க நேரிடலாம், அவங்களுக்கு என்ன நடக்குன்னு உங்களுக்கு நல்லா தெரியும், ஆனா இப்படியெல்லாம் இருக்குன்னு உங்களால சொல்ல முடியாது. அப்ப அவங்ககிட்ட சொல்லுங்க, “கவனிங்க, அடுத்தது  என்னவோ அதை செய்யுங்க. அடுத்தது என்னமோ அதை செய்யுங்க. அதை மட்டும்தான் நம்மால பண்ண முடியும்.” என்ன பொருத்தவரைக்கும் வித்தியாசம் இருக்கும் அதாவது மன அழுத்தம் சுய பரிதாபம் சோர்வு என்று இருக்கிறவர்களும் இருப்பாங்க, சிலர் என்ன சொல்வாங்க, “அவர் என்னை அடித்தாலும், நான் அவரை நேசிக்கத்தான் போகிறேன். என்னுடைய வாழ்க்கை என்ன சொல்லுதுன்னு எனக்கு தெரியாது, ஆனா நா தொடர்ந்து அவரில் விசுவாசமாக இருக்க போகிறேன். என்னுடைய அனுபவம் எனக்கு என்ன சொன்னாலும் உம்மை

நம்பியிருக்க போதிய விசுவாசத்தை எனக்கு தந்திடும். இதுதான் எப்போதும் என்னுடைய உந்து சக்தியாக இருக்குது, ஜான்.

**ஆன்கர்பெர்க்:** டாக்டர்கள் உங்ககிட்ட வந்து உண்மைய சொன்னப்ப உங்களுக்கு ரொம்ப வேதனையா இருந்துச்சு, இப்ப எல்லாத்துக்கும் மேல, புற்று நோயும் இருக்குது, அப்ப நீங்க, "ஊஊப், இனி முடிந்தது என்றிருந்தீர்கள்." அப்பறம், உங்க கணவரான கென்ன நேசிப்பதால

டாடா: ஆமா.

**ஆன்கர்பெர்க்:** தேவன் உங்க மனதை மாற்றினார். என்ன நடந்தது?

டாடா: ஆமா, சரியா சொன்னீங்க. எனக்கு புற்றுநோய் மூன்றாவது கட்டத்தில் இருக்கிறது என்பதை கண்டுபிடித்த போது தேவன் என்னை நித்திய வீட்டிற்கு அழைக்கிறார் என்று நான் யோசிக்க ஆரம்பித்தேன். ஆனா என்னுடைய கணவருடைய மனமார்ந்த அன்பையும் கரிசனையையும் பார்த்த போது, நா அவருக்கு தேவை என்பதை புரிந்துகொண்டேன், இது எனக்கு கொஞ்சம் வித்தியாசமா இருந்தது, ஏன்னா எனக்கு அதிகமான உதவிகள் தேவை. அவர் இடைவிடாம எனக்காக எல்லாத்தையும் செய்துட்டே இருக்கணும், ஆனாலும் அவர் என்னை அதிகமா நேசிக்கிறார். அதனால நான் இருக்கனுன்ற எண்ணத்தை கொடுத்தார், அந்த ஆறுதலை நான் அவருக்கு கடந்து செல்ல அனுமதித்தேன். என்னுடைய விருப்பத்தை பார்க்கும் முன் அவருடையதை கவனித்தேன். மரணத்தின் நேரம் வரும்போது, பழைய

கீர்த்தனையில் இருக்கிற கடைசி வரி எனக்கு ரொம்ப பிடிக்கும், "யோர்தானின் கரையை நான் கடக்கும்போது, எனது வியாகுளும் திகிலும் மறைகிறது. மரணத்தின் மரிக்கிறது பாதாளம் அழிகிறது, நான் கானானை சென்றடைகிறேன்." எனக்கு ஒரு உணர்வு இருக்குது நான் நித்தியத்தின் பகுதியை அடையும்போது, நா இதே கீர்த்தனையை என்னுடைய கணவரின் கரத்தை பிடித்து பாடிடுவேன்."

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வாரம் நீங்கள் கேட்க்க விரும்புகிரதான சில கேள்விகள் இருக்கிறது. அதாவது: தங்கள் வியாதியில் விசுவாசத்தோடு தேவனை நோக்கி வேண்டி கொள்ளுகிற அனைவரையும் சுகப்படுத்தவேண்டும் என்பது தேவனுடைய சித்தமா? அதன் விளைவாக தேவன் எல்லாரையும் சுகப்படுத்துவாரா? இந்த கேள்விக்கு நமது விருந்தினர்கள் பதில் சொல்லும்படி கேட்க போகிறேன். தவறாமல் நிகழ்ச்சியை பார்ப்பீர்கள் எனவும் நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

@2015 A.T.R.I.